**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 232/2019 |
| Name | : | Kalimuthu |
| P.W. | : | 4 |
| Father Name | : | Periyasamy |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **19.02.2026**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது மதகடிபுதுாரில் வசித்து வருகிறேன். விவசாய கூலி வேலை செய்கிறேன். தேதி, மாதம் ஞாபகம் இல்லை சுமார் 5-6 வருடங்களுக்கு முன்பு காலை 08.00 மணி அளவில் கொழுமம் முருகவேல் தோட்டத்தின் அருகே நான் மருந்து வாங்க சென்று கொண்டிருந்த போது அங்கே எனது மாமா கருப்பண்ணன் நின்று கொண்டிருந்தார் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் கருப்பண்ணன் கையெழுத்து போட்டார். அவர் தற்போது இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) என்னிடம் கையெழுத்து பெற்ற தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு

தெரியாது. காலை எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்றேன் என்றால் காவல் நிலையம் செல்லவில்லை. எனது வீடு மதகடிபுதுாரில் உள்ளது. நான் கையெழுத்து போட்டதாக சொல்லும் இடத்திற்கும், எனது வீட்டிற்கும் இடையே சுமார் 4 கி.மீ துாரம் இருக்கும். நான் அந்த இடத்திற்கு செல்ல வேண்டியது இல்லை என்றும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்து விட்டு தற்போது போலீசார் கேட்டுக்கொண்டதால் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.19 17:44:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்